# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.

**ஆணை நாள் 08.04.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். NC 1623/B/2023 (SA 16276/B/2021)**

திரு. E. கண்ணன் ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்,
பிரிவு அலுவலர்,
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில்,
சென்னை உயர்நீதிமன்ற வளாகம்,
சென்னை-104. ... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தால் (08.04.2026) இன்று நடத்தப்பட்ட நேரடி விசாரணைக்கு மனுதாரர் திரு.E.கண்ணன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.S.சுப்பிரமணியன், பொது தகவல் அலுவலர் (பொறுப்பு), பிரிவு அலுவலர், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில், சென்னை உயர்நீதிமன்ற வளாகம், சென்னை அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 02.12.2021 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)-ன்கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு மற்றும் 29.12.2023 அன்று தாக்கல் செய்த ஆணை நிறைவேற்றப்படாமை மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு (08.04.2026) இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மனுவானது மனுதாரர் 14.09.2021 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தகவல்கள் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனுவாகும்.

3. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் பொது அதிகார அமைப்பால் போதுமான தகவல்கள் வழங்கப்படவில்லையென தெரிவித்து, அதனை பெற்றுத் தரும்படி ஆணையத்திடம் கேட்டுக்கொண்டார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொது தகவல் அலுவலர் மனுதாரருக்கு 30.11.2021 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்தார்.

5. இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

**மனுதாரர் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலிற்கு நேரடியாக சென்று திரு.செல்லபாண்டியன் அவர்களின் முகவரி மற்றும் அவரின் தந்தையின் பெயரை பொது தகவல் அலுவலரிடம் அளித்து வேண்டிய தகவல்களை பெற்றுக்கொள்ளவேண்டும் அல்லது பொது தகவல் அலுவலர் அவர்கள் 2021-ஆம் ஆண்டு வரையில் எத்தனை செல்லபாண்டியன்,MABL., உள்ளனரோ அத்தனை செல்லபாண்டியன்,MABL., உடைய தந்தை பெயர் மற்றும் Enrollment எண்ணுடன் தகவல்களை மனுதாரருக்கு வழங்குவதாக அளித்த உத்தரவாதத்தின் அடிப்படையில், அத்தகவல்களை நேரடியாவோ அல்லது தபால் மூலமாகவோ மனுதாரருக்கு வழங்குமாறு உத்தரவிடப்பட்டு, இந்த மனு முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**வழக்கு எண். NC 1623/B/2023 (SA 16276/B/2021)**

**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர்,
பிரிவு அலுவலர்,
தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில்,
சென்னை உயர்நீதிமன்ற வளாகம்,
சென்னை-104.

2. மேல்முறையீட்டாளர்,
திரு. E. கண்ணன்,
எண்.31, பாரதியார் தெரு,
பழமத்தூர் கிராமம்,
மதுராந்தகம் தாலுகா,
செங்கல்பட்டு-603111.
செல்.8680009902.

Copy to: File. GP PC
11.04.26

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005